புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2054 • ஆகஸ்டு 17, 2023 • புரட்சி 23 • முழக்கம் 31 • விலை ரூ.3.00




# 12ம் ஆண்டில் திராவிடர் விடுதலைக் கழகம் மேட்டூரில் எழுச்சிப் பொதுக்கூட்டம்

மேட்டூரில் திராவிடர் விடுதலைக் கழக 12-ஆம் ஆண்டு துவக்க விழா பொதுக் கூட்டம் 12.08.2023 சனி மாலை 6.00 மணியளவில் மேட்டூர் சின்ன பார்க் திடலில் மேட்டூர் நகர திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் செ.மார்ட்டின் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட அமைப்பாளர் அண்ணாதுரை அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். குமரன் நகர் கிளைக் கழக செயலாளர் சீனிவாசன், மாவட்ட இளைஞரணி பொறுப்பாளர் அ.திவாகர், மு.திவாகர், விஜய் ஆகியோர் முன்னிலை வகுத்தனர்.மேட்டூர் டி.கே.ஆர். பகுத்தறிவு இசைக்குழுவின் பறை முழக்கம் மற்றும் பாடல்களோடு பொதுக் கூட்டம் தொடங்கியது.

நங்கவள்ளி நகர செயலாளர் பிரபாகரன் “சனாதனமும் திராவிடக் கல்வியும்” என்கின்ற தலைப்பிலும், மேட்டூர் கீ.கோ.தேன்மொழி “சனாதனமும் பெண்களும்” என்கின்ற தலைப்பிலும் உரை நிகழ்த்தினர்.

தந்தை பெரியார், புரட்சியாளர் அம்பேத்கர், மோடி ஆட்சியின் அவலங்கள், திராவிடர் விடுதலைக்கழகம் கடந்து வந்த பாதை ஆகிய ஆவண படங்கள் எல்.இ.டி. திரையில் பொதுமக்களுக்கு காண்பிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து புலவர் செந்தலை கவுதமன் அவர்கள் “திராவிடர் இயக்கமும் இந்தி எதிர்ப்பும்” என்கின்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார். இந்தி எதிர்ப்பில் திராவிடர் இயக்கம் எடுத்த போராட்டங்களையும் இந்தி எவ்வாறு ஆட்சி மொழி ஆகியது என்பதையும் விளக்கி உரை நிகழ்த்தினார்.




நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி “எது சனாதனம்? எது திராவிடம்?” என்கின்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார். “திராவிடர் விடுதலைக் கழகம் தமிழ்நாடு முழுவதும் நடத்தி வரும் தெருமுனைக் கூட்டங்கள் பொதுமக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளதாகவும் மேட்டூர் நகரத்தில் 12-ம் ஆண்டு துவக்கவிழா பொதுக் கூட்டமாக நடப்பது மகிழ்ச்சியளிக்கிறது எனவும் ஒன்றிய பி.ஜே.பி அரசும் தமிழ்நாடு ஆளுனர் ரவியும் சனாதன ஆட்சியை தமிழ் நாட்டில் உருவாக்க திட்டமிடுகிறார்கள் எனவும் வருகின்ற 2024 நாடாளுமன்ற தேர்தலில் மதவாத பிஜேபி ஆட்சியை விரட்டியடிக்க பரப்புரையை தொடர்ந்து செய்ய வேண்டும்” எனவும் கூறினார்.

சென்னை : கழகத்தின் 12 ஆம் ஆண்டு தொடக்கத்தை ஒட்டி, சென்னை மாவட்டக் கழகம் சார்பாக கேட் வெட்டி பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.

# சென்னையில் 58வது தெருமுனைக் கூட்டம்

**சென்னை :** *07.08.2023 திங்கள் மாலை 45 - வது கூட்டம் 5 மணிக்கு மயிலாப்பூர் பல்லக்கு மாநகரிலும், 46 - வது கூட்டம் மாலை 7 மணிக்கு மயிலாப்பூர் சாய்பாபா கோயில் அருகிலும் நடைபெற்றது.*

*மானமிகு சுயமரியாதைக்காரர், நவீன தமிழ்நாட்டின் தந்தை, முத்தமிழறிஞர் கலைஞரின் 5-ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரது படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய பிறகு கூட்டம் தொடங்கியது.*

*இறுதியாக தோழர்கள் நாத்திகன் - உமாபதி குழுவின் அரசியல் நைய்யாண்டி நிகழ்ச்சி நடைபெற்றது.*

*08.08.2023 செவ்வாய் கிழமை மாலை 5 மணிக்கு 47-வது கூட்டம் நொச்சிக்குப்பம் ஹவுசிங் போர்டிலும், 48-வது கூட்டம் அண்ணா சிலை அருகே உள்ள பஜார் வீதியிலும் நடைபெற்றது.*

*49-வது கூட்டம் மாலை 5 மணிக்கு மயிலாப்பூர் வீரபெருமாள் கோயில் தெருவிலும், 50-வது கூட்டம் மயிலாப்பூர், மாங்கொல்லையிலும் நடைபெற்றது.*

*மூத்த பெரியார் தொண்டர் சிற்பி இராசன், திண்டுக்கல் பெரியார் நம்பி ஆகியோர் கருத்துரையாற்றினார்கள்.*

*விசிக மைய சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் சாரநாத் மற்றும் விசிக நிர்வாகிகள் கூட்டத்தில் பங்கேற்று, 50-வது கூட்டத்தை வெற்றிகரமாக நடத்தி முடித்த கழகத் தோழர்களுக்கு பயனாடை அணிவித்து பாராட்டு தெரிவித்தனர்.*

*கழகப் பொதுச்செயலாளர் தோழர் விடுதலை இராசேந்திரன் பங்கேற்று தோழர்களை உற்சாகப் படுத்தினார்.*

*10.8.2023 வியாழன் அன்று 51-வது கூட்டம் மாலை 5 மணிக்கு மயிலாப்பூர் அப்பு தெருவிலும், 52 -வது கூட்டம் மாலை 7:30 மணிக்கு மந்தைவெளி மார்கெட்டில் நடைபெற்றது.*

*தொடர்ந்து, தோழர்கள் நாத்திகன் - உமாபதி ஆகியோரின் நைய்யாண்டி நாடகம் நடைபெற்றது.*

*கூட்டத்தின் நோக்கம் குறித்து தோழர் சிற்பி ராசன் உரையாற்றினார்.*

*53- வது கூட்டம் மாலை 5 மணியளவில் மயிலாப்பூர் வன்னியம்பதி பகுதியிலும்,*

*54 - வது கூட்டம் இரவு 7:30 மணியளவில் மயிலாப்பூர் சென் மேரீஸ் பாலம் அருகிலும் நடைபெற்றது.*

*கூட்டங்களுக்கு, மயிலை மனோகர் தொடக்கவுரையாற்றினார், மயிலை இராவணன் கூட்டத்தின் நோக்கம் குறித்து பேசினார்.*

*சென்மேரீஸ் பாலம் அருகில் நடைபெற்ற கூட்டத்தில் திமுக பேச்சாளர் O.C சுந்தர் கலந்து கொண்டு, தோழர்கள் நாத்திகன் - உமாபதி ஆகியோரின் நையாண்டி நாடகத்தை பாராட்டி பயனாடை அணிவித்தார்.*

*55-வது கூட்டம் மந்தைவெளி பட்ஸ் ரோட்டில் இன்று மாலை 5 மணிக்கும், 56-வது கூட்டம் மந்தைவெளி காமராசர் சாலையில் இரவு 7:30 மணியளவிலும் தொடங்கி நடைபெற்றது.*

*57-வது தெருமுனைக் கூட்டம் மந்தைவெளி காரக்கொட்டையில் (ஆவின் பால் பூத் அருகில்) மாலை 5 மணியளவில் நடைபெற்றது...*

*58-வது தெருமுனைக் கூட்டம் பட்டினப்பாக்கம் சீனிவாசபுரம் பகுதியில் இரவு 7:30 மணியளவில் நடைபெற்றது.*

*கூட்டத்தில், தமிழ்நாடு மாணவர் கழகம் தேன்மொழி, அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர் சங்க தலைவர் வா.அரங்கநாதன் பட்டினப்பாக்கம் மனிதநேய மக்கள் கட்சி பிரமுகர் முகமது ஜகீர், திமுக வட்ட செயலாளர் பொன்னுசாமி, எட்வின் பிரபாகரன், ஊடகவியலாளர் தினேஷ் ஆகியோர் தொடக்கவுரையாற்றினர்.*

*தோழர்கள், நாத்திகன் - உமாபதி, மயிலை மனோகர், மயிலை இராவணன் ஆகியோருக்கு மனித நேய மக்கள் கட்சி தோழர்கள் பயனாடை அணிவித்து வாழ்த்துகளை தெரிவித்தனர்.*

**ஈரோடு வடக்கு :** *ஈரோடு வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் 4 வது மற்றும் 5வது தெருமுனைக் கூட்டங்கள் 30.07.2023, ஞாயிறு அன்று மாலை 5 மணிக்கு ஈரோடு மாவட்டம் காசிபாளையம் காந்தி நகரிலும், மாலை 7 மணிக்கு காசிபாளையம் பேருந்து நிறுத்தத்திலும் நடைபெற்றது.*

*சனாதனம் திராவிடம் குறித்த பாடலை பெரியார் விழுது அறிவுக்கனல் பாட கூட்டம் தொடங்கியது.*

*காந்தி நகர் கழக பொறுப்பாளர் சின்னதம்பி, தூக்க நாய்க்கன்பாளையம் ஒன்றிய செயலாளர் கா.கருப்பணன் ஆகியோர் தலைமைத் தாங்கினார்கள்.*

*தொடர்ந்து தலைமைக் கழகப் பேச்சாளர் கா.சு.வேலுச்சாமி, கொளப்பளூர் சுப்பிரமணியம்,*

*மாவட்டத் தலைவர் நாத்திக ஜோதி ஆகியோர் தொடக்கவுரையாற்றினார்கள்.*

*திராவிட முன்னேற்றக் கழக பொறுப்பாளர்கள் காசிபாளையம் பேரூராட்சி துணைத் தலைவர் ராமசாமி, சேகர் திமுக, 11 வது வார்டு கவுன்சிலர் கார்த்திகேயனி, மாவட்ட மகளிரணி செயலாளர் பேபி மாரிமுத்து, யோகேஸ்வரமூர்த்தி கூட்டத்தின் நோக்கம் குறித்து விளக்கிப் பேசினார்கள்.*

*கழக மாநில வெளியீட்டுச் செயலாளர் இராம.இளங்கோவன் அவர்கள் நிறைவுரையாற்றினார்.*

*காந்தி நகர் சண்முகம், பழனிச்சாமி ஆகியோர் நன்றி கூறினார்.*

*காசிபாளையம் பேரூராட்சி தலைவர் தமிழ்ச்செல்வி கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பித்தார்.*

*06.08.2023 அன்று கவுந்தப்பாடி, பவானி, ஜம்பை, ஆப்பக்கூடல் ஆகியப் பகுதிகளிலும், 13.08.2023 அன்று வெள்ளாங்கோயில், கொளப்பலூர் ஆகிய பகுதிகளிலும் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றது.*

*கழக வெளியீட்டுச் செயலாளர் இராம. இளங்கோவன், தலைமைக் கழகப் பேச்சாளர் வேலுச்சாமி, நிவாஸ், நாத்திக ஜோதி, நம்பியூர் இரமேசு, சுப்பிரமணியம், கருப்பணன் ஆகியோர் உரையாற்றினார்கள்.*

**திண்டுக்கல் :** *திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் எது திராவிடம்? எது சனாதனம்? பழனியில் பழனி சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி.செந்தில்குமார் தொடங்கி வைத்தார்.*

*முதல் கூட்டம் திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகேயுள்ள ஆண்டிப்பட்டியிலும், 2-வது கூட்டம் பாப்பம்பட்டியிலும், 3-வது கூட்டம் அய்யம்பாளையத்திலும், 4-வது கூட்டம் சின்ன கலையம்புத்தூரிலும், 5-வது கூட்டம் அ.கலையம்புத்தூரிலும், 6-வது நெய்காரப்பட்டியிலும் 7-வது கூட்டம் வயலூரிலும், 8-வது கூட்டம் கீரனூர் நால் ரோட்டிலும், 9-வது கூட்டம் பழனி கோரிக்கடாவிலும், 10-வது கூட்டம்*


3ம் பக்கம்

### தலையங்கம்

# நாங்குநேரி ஜாதிவெறி

நெல்லை மாவட்டம் நாங்குநேரியில் பள்ளி மாணவர்களிடையே நடந்த ஜாதிவெறி தாக்குதல் தமிழ்நாட்டை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. நன்றாக படிக்க கூடிய தலித் மாணவனை ஆதிக்க ஜாதியை சேர்ந்த சக மாணவர்கள் எடுபிடிகளாக, இழிவுபடுத்தி வந்திருக்கிறார்கள். பாதிக்கப்பட்ட அந்த மாணவன் பள்ளிக்குப் போக மறுத்த நிலையில் ஆசிரியர்கள் தலையிட்டு சமாதானப்படுத்தி மீண்டும் பள்ளிக்கு வர செய்திருக்கிறார்கள்.

ஆத்திரத்தில் ஆதிக்க ஜாதி பள்ளி மாணவர்கள் தலித் மாணவனை வீடுபுகுந்து அரிவாளால் வெட்டியிருக்கிறார்கள். தடுக்க வந்த சகோதரியையும் வெட்டியிருக்கிறார்கள். பள்ளி மாணவர்களிடையே கூட ஜாதிவெறி தலை தூக்குகின்ற அளவிற்கு தமிழகம் மிகக் கேவலமான நிலைக்கு போய்கொண்டிருக்கிறது. இதற்கு என்ன காரணம்.

நீண்டகாலமாக ஜாதி எதிர்ப்பு இயக்கங்கள் செயல்படவிடாமல் முடக்கப்பட்டு வருகின்றன. பெரியார் ஜாதியைக் காப்பாற்றும் அரசியல் சட்டத்தைத் தீயிட்டுக் கொளுத்தினார். ஜாதி எதிர்ப்பு பிரச்சாரத்தை தமிழ்நாடு முழுவதும் நடத்திவந்தார். அதற்குக் காரணமாக இருக்கிற கடவுள், மதம், ஜாதியை மக்கள் மன்றத்தில் போட்டு உடைத்தார். இப்போது பெரியார் இயக்கங்கள் அப்படிப்பட்ட கருத்துகளை பரப்புகின்ற தொண்டில் இந்துத்துவா வாதிகள் இந்துமதத்தை புண்படுத்துகிறார்கள் என்று சொல்லி உடனே கூக்குரல் போடுகிறார்கள், நீதிமன்றத்திற்கு செல்கிறார்கள். அரசும் பயந்து இந்த பரப்புரைகளுக்குத் தடைபோட்டு வருகிறது. இந்து ராஷ்டிரம் பேசுகிற இந்துத்துவா வாதிகள் ஜாதிக்கு கருத்தியலை வழங்குவதே இந்த சனாதன கொள்கைகள் தான் என்பதை அப்படியே மூடி மறைத்துக் கொண்டு தமிழ்நாட்டில் ஊழல் எதிர்ப்பு என்ற முகமூடியோடு மக்களிடம் வருகிறார்கள். அதோடு இஸ்லாமிய வெறுப்பையும் அவர்கள் முன்னிறுத்தி வருகிறார்கள்.

மற்றொரு பக்கம் ஒருகாலத்தில் கல்வி மறுக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட பார்ப்பனரல்லாத மக்கள் வீட்டில் குலத் தொழிலை செய்து கொண்டிருந்தவர்கள் தமிழ்நாட்டில் அமுல்படுத்தப்பட்ட சமூகநீதித் திட்டங்களால் பயன்பெற்று வளர்ந்தவர்கள். அந்த இடைநிலை ஜாதியை சேர்ந்தவர்கள் இப்பொழுது ஜாதியை கையில் எடுத்துக் கொண்டு தங்களுக்குக் கீழே இருக்கிற ஜாதியை ஒடுக்குவதற்கு பயன்படுத்துகிறார்கள். இதற்கு அரசியல் கட்சிகள் துணை போகின்றன, ஜாதிக் கட்சிகளின் பெயர்களில் ஜாதியை மறைத்துக் கொண்டு தேர்தல் களத்துக்கு வந்துவிடுகின்றன. பள்ளிகளில் மாணவர்கள் ஜாதி அடையாளத்தைக் குறிக்கும் கயிறுகளை கைகளில் கட்டிக் கொண்டு வகுப்புக்கு வருகிறார்கள். ஜாதி தலைவர்கள் படம் போட்ட டீசர்ட் அணிந்து கொண்டு – ஊரில் வலம் வருகிறார்கள். கோயில் விழாக்களில் ஜாதி அமைப்புகளின் கொடிகள் ஏற்றப்படுகின்றன.

ஜாதிக்கட்சிகள் இதை ஊக்குவிக்கின்றன, தங்களின் ஜாதிக்குரிய இந்துக் கோயிலில் தீண்டப்படாத மக்களை அனுமதிக்க மாட்டோம் என்று - ஜாதிவெறியைத் தூண்டி கடவுள்களையும் ஜாதி சங்கத்தில் உறுப்பினராக்கி வருகிறார்கள்.

ஆகமக் கோயில்களில் கருவறையில் பார்ப்பன புரோகிதர்கள் அரங்கேற்றிவரும் தீண்டாமையை கிராம கோயில்களில் இடைநிலை ஜாதியினர் தலித் மக்களுக்கு எதிராக செயல்படுத்திவருகிறார்கள்.

பள்ளி மாணவர்களிடையே பரவி வரும் இந்த ஜாதிவெறி குறித்து ஆராய தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், ஒய்வுபெற்ற நீதிபதி சந்துரு தலைமையில் குழு ஒன்றை அமைத்திருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

எனவே இந்த ஜாதிவெறி அரசியல் உருவாக்குகிற ஆபத்துகளில் இருந்து மக்களை மீட்டெடுப்பதற்கான தீர்வுகள் பற்றியும், அதற்கான வழிமுறைகளை பற்றியும் இந்த குழு ஆராயும் என்று நம்புகிறோம். ஜாதிவெறி கலவரங்களில் ஈடுபட்டவர்களுக்கு இனிமேல் இட ஒதுக்கீடு தர முடியாது, அவர்களுக்கு அரசு நலத்திட்டங்கள் வழங்க கூடாது என்பது குறித்தெல்லாம் நீதிபதி சந்துருவின் குழு பரிசீலிக்க வேண்டும் என்பது நமது கோரிக்கை.

ஜாதி என்பது அறிவியலுக்கு எதிரானது, சமூகத்தில் ஜாதியின் சுரண்டல், வளர்ச்சிக்கு போடும் முட்டுக்கட்டைகளை எல்லாம் பாடநூல் வழியாக பள்ளி மாணவர்களிடையேநாம்பாடத்திட்டத்தின்வழியாகவிளக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. தமிழ்நாடு ஜாதியற்ற, ஜாதிவெறி அற்ற மாநிலமாக மாறும் போது தான் தமிழ்நாடு அதற்கான அடையாளத்தோடு, சுயமரியாதையோடு தலைநிமிர்ந்து நிற்க முடியும்.

# பாஜக ஊழலற்ற கட்சியா? (2)

## மெகா மோசடிகள்

***1) ஆருத்ரா நிறுவனம் 2400 கோடி வரை மோசடி செய்துள்ளது. ஒரு லட்சத்து 9255 பேர் முதலீடு செய்துள்ளனர். அதிகமான வட்டி தருவதாக கூறி முதலீடு செய்ய வைத்துள்ளனர்.***

- *தமிழ்நாட்டையே உழுக்கிய ஆருத்ரா நிதி நிறுவன மோசடியில் பாஜகவின் விளையாட்டு மற்றும் திறன் மேம்பாட்டு பிரிவு மாநில செயலாளராக பதவி வகித்த ஹரீஷ், ஆருத்ராவின் முக்கிய இயக்குனர்களில் ஒருவர். அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.*
- *ஹரீஷ் மாநில பதவி பெறுவதற்கு, பாஜகவில் சிலருக்கு மோசடி செய்த பணத்தில் இருந்து லஞ்சம் கொடுத்திருப்பதும் விசாரணையில் தெரியவந்துள்ளது.*
- *“ஆருத்ரா போன்ற மோசடியில் ஈடுபட்டவர்கள் மாநில தலைமைக்கு நெருக்கமாக இருந்து வருகின்றனர். பணத்தை பெற்றுக் கொண்டு பொறுப்பு போடுகிறார்கள்” என்று கூறி பாஜக மாநில பொருளாதார பிரிவு செயலாளர் எம்.ஆர்.கிருஷ்ண பிரபு (13.04.2023) அன்று ராஜினாமா செய்துள்ளார்.*
- *மேலும் பாஜகவின் வழக்கறிஞர் பிரிவைச் சேர்ந்த அலெக்ஸ், ராணிப்பேட்டை மாவட்ட பாஜக செயலாளர் டாக்டர் சுதாகர் ஆகியோருக்கும் தொடர்பு இருப்பதாக சம்மன் அனுப்பப்பட்டுள்ளது.*

***2) பாஜகவின் சட்டமன்ற உறுப்பினர் நயினார் நாகேந்திரன் மற்றும் அவரது மகன் நயினார் பாலாஜி, சென்னை விருகம்பாக்கத்தில் உள்ள 1.3 ஏக்கர் நிலத்தை மோசடியாக திருநெல்வேலியில் கடந்த ஆண்டு (2022) பத்திரப்பதிவு செய்துள்ளனர்.***

- *மோசடியாக செய்யப்பட்ட நிலத்தின் மதிப்பு 100 கோடி ஆகும். வாரிசு இல்லாத நிலத்தை அபகரித்துள்ளனர். அந்த பத்திரப்பதிவு ரத்து செய்யப்பட்டுள்ளது.*

***3) கோவையில் ரயில்வே துறையில் வேலை வாங்கித் தருவதாக கூறி 2019 ஆம் ஆண்டு, ரூ. 28 இலட்சம் பாஜகவை சேர்ந்த நபர் மோசடி செய்துள்ளார். அந்த பாஜக பிரமுகர் உத்திரப்பிரதேசத்தின் மாநில பொறுப்பாளர். காவல் துறையால் கைது செய்யப்பட்டார்.***

***4) விருதுநகர் மாவட்ட மேற்கு மாவட்டத் தலைவர் சுரேஷ் குமார் மற்றும் மேற்கு மாவட்ட செயலாளர் கலையரசன் ஆகியோர் ரயில்வேயில் வேலை வாங்கி தருவதாக கூறி 2017 ஆம் ஆண்டு 11 இலட்சம் மோசடி செய்துள்ளனர்.***

- *இருவரும் மோசடி செய்தது, பாஜகவின் சிவகாசி மாநகரத் துணைத் தலைவராக பதவி வகித்த பாண்டியன் என்பவரைத் தான். பாண்டியன் பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலையிடம் புகார் அளித்தும் பணம் கிடைக்கவில்லை.*
- *எனவே, பாண்டியன் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன் பெயரில் விருதுநகர் பாஜக மாவட்ட பொறுப்பாளர்கள் சுரேஷ் குமார் மற்றும் கலையரசன் இருவரும் கடந்த ஜனவரி மாதம் கைது செய்யப்பட்டனர்.*

*5) திருச்சியில், எல்ஃபின் (ELFIN) என்ற நிதி நிறுவனத்தை நடத்தி வந்த ராஜா பாஜகவைச் சேர்ந்தவர். ஆருத்ராவிற்கு முன்னோடியாகவே இந்த மோசடி உள்ளது. பணத்தை முதலீடு செய்தால் இரட்டிப்பாக தருவதாக கூறி மோசடி செய்துள்ளார். புகார்களை அடுத்து ராஜா மற்றும் அவரது தம்பி ரமேஷ் இருவரும் கைது செய்யப்பட்டனர்.*

- *2019 ஆம் ஆண்டு நடைபெற்ற மக்களவை தேர்தலின் போது இவரது காரில் இருந்து 2 கோடி ரூபாய் பணம் ரொக்கமாக பிடிபட்டது.*

*6) மயிலாடுதுறை மாவட்ட பாஜக கைத்தறி இணை செயலாளர் விஜயன் என்பவர், 6.70 இலட்சம் மோசடி. ஒன்றிய அரசு நிறுவனமான ONGC இல் வேலை வாங்கி தருவதாக கூறி மோசடி செய்துள்ளார். 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் காவல் துறையில் புகார் அளிக்கப்பட்டது வழக்கு பதிவு செய்யப்பட்டது.*

*7) பாஜக மாநில யுவ மோர்ச்சா மாநில செயலாளர் ராகுல் தினேஷ் சுரானா, சுரானா என்ற நிறுவனத்தை நடத்தி 8 ஆயிரம் கோடி ரூபாய் வரை மோசடி செய்து கடந்த வருடம் 2022 ஆம் ஆண்டு கைதாகினார். தங்கங்களை முறைகேடாக கடத்தியது தெரியவந்துள்ளது.*

- *வெளிநாடுகளில் சட்ட விரோத முதலீடு, வரி எய்ப்பு, ஜி.எஸ்.டி முறைகேடு, வங்கிகளில் வாங்கிய பணத்திற்கும் வட்டி கட்டாமல் மோசடி என சுரானா நிறுவனம் ஈடுபடாத மோசடிகளே இல்லை.*

*8) பாஜகவைச் சேர்ந்த யூ டியூபர் கார்த்திக் கோபிநாத், பெரம்பலூர் மாவட்டம் திருவாச்சூர் மதுர காளியம்மன் கோவிலை சீரமைப்பதாக கூறி இணையத்தில் 38 இலட்சம் ரூபாய் நிதி வசூலித்து மோசடி செய்துள்ளார். கடந்த வருடம்(2022) கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.*

*9) தமிழ்நாடு பாஜக விழுப்புரம் மாவட்ட கல்வியாளர் பிரிவு செயலாளர் சங்கரன். இவர் அரசு ஆசிரியராகவும் பணியில் இருந்துள்ளார். இவர் கடந்த 2019 ஆம் ஆண்டு மின்சாரத் துறையில் வேலை வாங்கி தருவதாக கூறி 70 இலட்சம் வரை மோசடி செய்துள்ளார்.*

*10. டெல்லி துவாரகா குருகிராம் கேர்கி தவுலா சுங்கசாவடி இடையே 19.06 கிமீ நீள விரைவுச்சாலை அமைக்க திட்டம்.*

*11. திட்டத்துக்கு தேவையான நிலத்தை அரியானா மாநில அரசு இலவசமாக வழங்கியுள்ளது,*

*12. பொருளாதார விவகாரங்களுக்கான ஒன்றிய அமைச்சரவைக் குழு கிமீக்கு ரூ.18.20 கோடி வீதம் ரூ.529 கோடியில் திட்டத்துக்கு அனுமதி*

*13. .கடந்த 2019-ல் திட்டப்பணிகள் தொடங்கியது.*

*14. திடீரென கிமீக்கு ரூ.250.77 கோடி வீதம் ரூ.7287 கோடி செலவிட ஒன்றிய நெடுஞ்சாலை துறை திட்டம்.*

*15. ரூ.6758 கோடி முறைகேட்டை சிஏஜி அம்பலப்படுத்தியுள்ளது.*

தொகுப்பு : மனோஜ்

(தொடரும்)

# 1936-இல் அம்பேத்கர் எழுப்பிய உரிமை முழக்கத்துக்கு
# 1971-இல் சட்ட வடிவம் தந்தவர் கலைஞர்

**சூலூர் கூட்டத்தில்**

**கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேச்சு (2)**

மகத் குளம் நீர் எடுக்கும் போராட்டத்தையொட்டி 1935-இல் அம்பேத்கர் நடத்திய அந்த மாநாட்டில் அம்பேத்கர் இயற்றிய தீர்மானங்களில் ஒன்று அனைத்து சாதியினருக்கும் அர்ச்சகராக உரிமை வேண்டும் என்பது. அதற்கு அடுத்து ஜாதி ஒழிப்பு. இந்த உரையில் இன்னும் அவர் சொல்லுகிறார் இன்னும் கொஞ்சம் கடுமையாக சொன்னார், இந்து மதத்திற்கான மூலநூல் என்று ஒரு நூலை அடையாளம் காட்டுங்கள், சைவனும் வைணவனும் மோதிக்கொண்ட வரலாறு நிறைய இருக்கிறது, வடகலையும் தென்கலையும் ஆண்டாண்டு காலமாக காஞ்சிபுரத்தில் சண்டையிடுவதை நாம் பார்க்கிறோம். ஆனால் இதுதான் இந்து மதம் என்கிறாய், அதற்கு மூல நூல் எது? கிருஸ்துவர்களுக்கு பைபிள் இருக்கிறது, இஸ்லாமியர்களுக்கு குரான் இருக்கிறது, இந்துமதத்திற்கு என்ன இருக்கிறது என்று சொல்.

இந்து மதத்தினர் என்று சொல்லப்படும் எல்லோருக்கும் அனைத்து ஜாதியினருக்கும் அர்ச்சகராகும் உரிமை வேண்டும், அதற்கான படிப்பை வைத்து தேறியவர்களை அர்ச்சகர்களாக நியமிக்க வேண்டும். பட்டயம் பெறாமல் அர்ச்சகராக இருப்பவர்கள் செய்கிற எந்த சடங்கும் செல்லாது என்று அறிவிக்க வேண்டும் என்று பேசுகிறார். இந்த தீர்மானங்களை அடுத்த 1936-லும் பேசுகிறார்.

பெரியாரும் காங்கிரஸை விட்டு வெளியே வந்த பின்னாலும் மதுரையில் 1926 டிசம்பரில் 10-வது பார்ப்பனரல்லாத மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது. அது என்ன? இந்துக்கள் என்று சொல்லப்படும் சகல சமூகத்தவருக்கும் உரிமை வேண்டும், பூஜையிலும், பிரவேசத்திலும், தொழுகையிலும் சம உரிமை வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானங்கள் போட்டு என்ன பயன்? நடைமுறைக்கு எப்படி வரும்? நடைமுறைக்கு கொண்டு வந்த பெருமை நம்முடைய கலைஞர் அவர்களுக்கு உண்டு. 1971-இல் முதல்முறையாக கொண்டுவந்து, முதலில் பரம்பரையாக இருப்பதை ரத்து செய்கிறார். கலைஞர் போராட்டத்தைப் பற்றி எல்லாம் சொன்னார்கள். பெரியார் கறுவறை நுழைவுப் போராட்டத்தை அறிவித்த போது நீங்கள் என் ஆட்சியில் போராட வேண்டுமா என்று கேள்வி எழுப்பிய கலைஞர், பிறகு சட்ட திருத்தத்தை கொண்டு வந்தார்.

இங்கே அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராக முடியாது, ஆகமத்தின் படி ஒரு குறிப்பிட்ட குலத்தில் பிறந்தவரே ஆகமுடியும் என்று மதுரை உயர்நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் தீர்ப்பளித்தார். அதை இப்போது சென்னை உயர்நீதிமன்றம் ரத்து செய்துள்ளது. கேரளாவில் ஆதித்யன் என்ற ஈழவர் அர்ச்சகராக நியமிக்கப்பட்டதை எதிர்த்து தொடர்ந்த வழக்கில் அரசியல் சட்ட நடைமுறைக்கு வந்த பின்னால் அதுதான் பெரியது, அதற்கு முன்னால் என்ன பெயரில் பாகுபாடு இருந்தாலும் அதெல்லாம் செல்லாது, சமத்துவத்தை பேசுகிற அரசியல் சட்டம் தான் உயர்ந்தது, இதைத்தான் ஏற்றுக் கொள்ள முடியும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் என்று தீர்ப்பு சொன்னார்கள்

இந்த தீர்ப்பை சொன்ன இரண்டு பேரும் தென்னாட்டைச் சேர்ந்த நீதிபதிகள் நம்முடைய தமிழ்நாட்டுச் சேர்ந்த துரைசாமி ராஜு, கர்நாடகத்தில் பிறந்திருந்தாலும் தமிழ்நாட்டில் கல்வி கற்று பகுத்தறிவாளராக இருந்த ராஜேந்திர பாபு இவர்கள் இருவரும் தான் இந்த தீர்ப்பு சொன்னவர்கள். 1936-இல் அம்பேத்கர் கொடுத்த குரலுக்கு 1971-இல் சட்ட வடிவம் தந்தவர் கலைஞர், காரணம் கலைஞர் இளம் பருவத்தில் இருந்தே சுயமரியாதை, திராவிட அரசியல் சிந்தனையோடு வளர்ந்தது தான்.

தொடரும்

## அரசு முடிவுகளுக்கு - கடவுளிடம்
## குறி கேட்ட ரோம் பேரரசு

**அம்பேத்கர் தனது உரையில் இவ்வாறு கூறினார்.**

மனிதனின் மேல் மதம் கொண்டிருக்கிற அதிகாரத்தை நிறுவ இன்னொரு எடுத்துக்காட்டாக ரோமிலுள்ள பிளபியன்களின் பிரச்சனையை எடுத்துக்கொண்டு என் கருத்தை மேலும் தெளிவுபடுத்த முயல்கிறேன். ரோமானிய குடியரசின் கீழ் இருந்த மேல்மட்ட செயற்குழுவில் தங்களுக்கும் ஒரு பங்கு வேண்டும் என்று பிளபியன்கள் போராடினர். பிளபியன்களின் சட்டபேரவையான கமிட்டியா சென்சாரியாட்டா என்ற சபையின் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர் பிளபியன் கான்சல் ஒருவர் நியமனம் செய்யப்படுவதற்கான உத்திரவாதத்தை பெற்றார். நிர்வாகத்தை நடத்தி செல்வதில் பாட்ரிசியன் கான்சல்கள் பிளபியன்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக நடந்துவந்தார்கள் என எண்ணியதால் தங்களுக்காக சொந்த கான்சல் தேவை என உணர்ந்தனர். ரோமானிய குடியரசு சாசனத்தின் படி ஒரு கான்சலின் நடவடிக்கையை தடை செய்வதற்கான அதிகாரம் மற்றொரு கான்சலிடம் இருந்தது.

எனவே பிளபியன்கள் பெரியதொரு வெற்றியை அடைந்தனர் என்பது எளிதாக விளங்கும். ஆனால் உண்மையில் அவர்கள் ஆதாயம் ஏதும் அடைந்தனரா? இல்லை என்றே சொல்ல வேண்டும். பாட்ரிசியன் கான்சலைச் சார்ந்திராமல் தனித்து செயல்படக்கூடிய உறுதியான ஒரு பிளபியன் கான்சல் ஒருவரை ஒருபோதும் பிளபியன்களால் தேர்ந்தெடுக்க முடியவில்லை. சாதாரணமாக பிளபியன்கள் கான்சல் ஒருவரை பிளபியன்களே தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம் என்கிற சூழலில் ஒரு சரியான திறமையான கான்சலை அவர்களால் தேந்தெடுக்க முடிய வேண்டும். ஆனால் இது முடியவில்லை ஏன்? உறுதியான ஒரு பிளபியனை தங்களுடைய கான்சலாக தேர்ந்தெடுக்க பிளபியன்கள் முடியாமல் போனது ஏன்? மனித மனங்களில் மேல் மதம் எந்தளவுக்கு ஆட்சி செலுத்துகிறது என்பதைத்தான் இந்த கேள்விக்கான விடை வெளிப்படுத்துகிறது. ரோமானிய பொதுமக்களின் மத நம்பிக்கையின் படி டெல்பி என்னும் இடத்தில் குறி சொல்பவரால் தேவதைக்குச் சம்மதம் ஆனவராக அறிவிக்கப்படாத எந்த ஒரு மனிதனும் ஒரு அதிகாரியாக தன்னுடைய கடமையை ஆற்ற முடியாது, டெல்பி தேவதையின் கோவில்களில் பொறுப்பாளராக இருந்த பூசாரிகள் அனைவரும் பாட்ரிசியன்களே.

பாட்ரிசியன்களுக்கு எதிரான உறுதியான ஒரு கான்சலை – தற்போது இந்தியாவில் வழங்கி வருகிறபடி ‘இனப்பற்றுள்ள ஒரு கான்சலை – பிளபியன்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட கான்சல்’ தேவதைக்கு சம்மதம் ஆனவர் அல்ல என்று அறிவிப்பதே குறி கூறுவோரின் மாறாத வழக்கமாக இருந்தது.

# கோபி, திண்டுக்கல், திருப்பூர் தெருமுனைக் கூட்டங்கள் எழுச்சி

முதல் பக்க தொடர்ச்சி

*நரிக்கல்பட்டியிலும், 11-வது கூட்டம் மானூரிலும் நடைபெற்றது.*

*இக்கூட்டத்தில் பெரியார், திராவிடம் சனாதனம் குறித்து பாடல் பாடினார்.*

*கூட்டத்தில் கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, தலைமைக் குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம், திருப்பூர் மகிழவன், மருதமூர்த்தி, சபரிகிரி, மாக்சிம் கார்கி, ஆயுதன் உள்ளிட்டோர் கருத்துரையாற்றினார்கள்.*

**சேலம் :** *11.08.2023 அன்று வெள்ளி மதியம் 2 மணியிலிருந்து 4 மணி வரை ஜலகண்டாபுரம் அரசமரம் பேருந்து நிறுத்தத்திலும், மாலை 4.30 லிருந்து 6 மணி வரை தமிழ் அடுமனை பேக்கரி எதிரிலும், மாலை 6.30 லிருந்து இரவு 8 மணி வரை ஜலகண்டாபுரம் பேருந்து நிறுத்தத்திலும் நடைபெற்றது.*

*நங்கவள்ளி ஒன்றிய செயலாளர் கோ.இராசேந்திரன் தலைமை தாங்கினார், சேலம் (மே) மாவட்ட தலைவர் சூர்யகுமார், நங்கவள்ளி நகர செயலாளர் சு. பிரபாகரன், தொடர்ந்து கழக தலைமைக்குழு உறுப்பினர் காவை.ஈசுவரன், தமிழ்நாடு மாணவர் கழகம் இளவரசன், வி.சி.க. கொளத்தூர் ஒன்றியச் செயலாளர் சேட்டுக்குமார் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.*

**திருப்பூர்:** *தாராபுரம்,திருப்பூர் மாவட்டத்தில் வட தாரை, பூளவாடி பிரிவு பகுதியில் செல்வம் தலைமையில் நடைபெற்றது.*

*கழக முகநூல் பொறுப்பாளர் பரிமளராசன், மாவட்டத்தலைவர் முகில்இராசு,திருவள்ளுவர் பேரவை இராஜாமணி, ஆதித்தமிழர் பேரவை தெற்கு மாவட்ட தலைவர் இராசேந்திரன் ஆகியோர் உரையாற்றினார்கள்.*

*2-வது கூட்டம் ஐந்து சாலை சந்திப்பில் நடைபெற்றது. தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் வி.சிவகாமி, கழகப் பொருளாளர் சு.துரைசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் பன்னீர்செல்வம், மாநகர அமைப்பாளர் முத்து, ஆதிதமிழர் மாணவரணி மாநிலத் துணைச் செயலாளர் (ATP) சுகன்யா ஆகியோர் கருத்துரையாற்றினார்கள். சிரிஜா நன்றி கூறினார்.*

*3- வது கூட்டம் அண்ணாசிலை அருகில் மாலை 4 மணி அளவில் தெருமுனை கூட்டம் தொடங்கியது. ஆதிதமிழர் பேரவை தெற்கு மாவட்டச் செயலாளர் இராஜேந்திரன், திருவள்ளுவர் பேரவை இராஜாமணி, மாவட்டத் தலைவர் முகில் இராசு ஆகியோர் உரையாற்றினார்கள். சரசுவதி நன்றி கூறினார்.*

*4-வது கூட்டம் புதிய பேருந்து நிறுத்தத்தில் நடைப்பெற்றது. தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் ஆசிரியர் சிவகாமி தொடக்கவுரையாற்றினார்.*

*தமிழ் புலிகள் கட்சி மண்டலச் செயலாளர் ஒன்டிவீரன் கருத்துரையாற்றினார், மாநில பொருளாளர் சு.துரைசாமி நிறைவுரை யாற்றினார். மடத்துக்குளம் ஒன்றியத் தலைவர் கணக்கன் நன்றி கூறினார்.*

*சண்முகம் திக, முத்து மாநகர அமைப்பாளர், சரவணன், சிவானந்தம் மடத்துகுளம் செயலாளர், திருப்பூர் அய்யப்பன், மடத்துக்குளம் அய்யப்பன், இரமேசு ஆகியோர் கலந்துகொண்டனர்.*

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# மோடி அரசின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் முறைகேடுகள்

எந்தத்துறையையும்மோ(ச)டி அரசுவிட்டுவைக்கவில்லை.மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திலும் மெகா மோசடி நடைபெற்றிருப்பதை ஒன்றிய தலைமை தணிக்கை அலுவலர் அறிக்கை அம்பலப்படுத்தியுள்ளது. கிராமப்புற குடும்பங்களில் 85.9 சதவீதம் பேரும் நகர்ப்புற குடும்பங்களில் 82 சதவீதத் தினரும் மருத்துவ சிகிச்சைபெறுவதில் சிக் கல்களைச் சந்திக்கின்றனர்; மக்கள் தொகை யில் 17 சதவீதத்திற்கும் அதிகமானோர் குடும்ப பட்ஜெட்டில் குறைந்தது 10 சதவீதத்தை மருத் துவத் தேவைகளுக்காக செலவிடுகின்றனர் என்று தேசிய மாதிரி ஆய்வு அமைப்பின் (NSSO) ஆய்வு கூறுகிறது. மருத்துவச் செலவுகளே பல குடும்பங்க ளை கடனில் தள்ளுகிறது, கிராமப்புற இந்தி யாவில் 24 சதவீதம் குடும்பங்களும் நகர்ப் புறத்தில் 18 சதவீத மக்களும் தங்களது மருத்து வத் தேவைகளை கடன் வாங்கியே பூர்த்தி செய்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில், ஆயுஷ்மான் பாரத்-பிரதான் மந்திரி ஜன் ஆரோக்யா யோஜனா (AB-PM-JAY) 2018-செப்டம்பர், 23 அன்று ஜார்க்கண்ட் மாநிலம் ராஞ்சியில் பிரதமர் மோடியால் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டம் 50 கோடிக்கும் அதிக மான பயனாளிகளை இலக்காகக் கொண்டு தொடங்கப்பட்டது. “உலகின் மிகப்பெரிய அரசு நிதியுதவி சுகாதாரத் திட்டம்” இது என்றும் கூறப்பட்டது. ஆயுஷ்மான் பாரத்- பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா, ஒரு குடும்பத்திற்கு ஆண்டுக்கு ரூ.5 லட்சம், இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை மருத்துவச் செல வினங்களை நேரடியாக சம்பந்தப்பட்ட மருத்துவமனையிலேயே செலுத்திவிடும் என்றார் பிரதமர் மோடி.

தணிக்கைத் துறை அம்பலம் :

ஆனால் தற்போது இந்தத் திட்டத்தில் பெரும் முறைகேடுகள் நடைபெற்றுள்ளது. இறந்து போனவர்களும் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்திய தணிக்கைத்துறை வெளியிட்டுள்ள இந்த மோசடியை, ஒன்றிய அரசு “ இந்தத் திட்டம் தொடங்கப்பட்டபோது செல்போன் எண் கட்டாயமாக்கப்படவில்லை. வெறும் ஆதாரை மட்டுமே கவனத்தில் கொண்டோம்” எனக் கூறி மோசடியிலிருந்து தப்பிக்கப் பார்க்கிறது. திட்டத்தின் பயனாளிகள் தரவு தளத்தில் கிட்டத்தட்ட 7.5 லட்சம் பேர் ஒரே செல்போன் எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளனர்: 9999999999. கிட்டத்தட்ட 1.4 லட்சம் பேர் 8888888888 என்ற எண்ணுடன் இணைக்கப் பட்டுள்ளனர், மேலும் 96,000 பேர் மற்றொரு போலி எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ள னர். ஒரே ஆதார் எண்ணுடன் பல பயனாளி கள் இணைக்கப்பட்டுள்ளது அரங்கேறியுள் ளது. தமிழகத்தில் 4,761 பதிவுகள் வெறும் ஏழு ஆதார் எண்களுடன் இணைக்கப் பட்டுள்ளன. இந்தியாவின் தலைமை கணக்குத் தணிக்கை பிரிவு மோசடியை அம்பலப்படுத்தி யதால் ஒன்றிய சுகாதார அமைச்சகம் இந்தத் திட்டத்தைப் பாதுகாக்க முயற்சிக்கிறது. கிட்டத்தட்ட 7.5 லட்சம் பயனாளிகள் ஒற்றை மொபைல் எண்ணுடன் இணைக் ப்பட்டுள்ளனர் என்று தணிக்கை அறிக்கை தெரிவிக்கிறது. ஆனால், ஒன்றிய அரசோ பய னாளிகளின் சரிபார்ப்பில் மொபைல் எண்கள் கவனத்தில் கொள்ளப்படவில்லை என்கிறது ஒன்றிய சுகாதார அமைச்சகம்.

இறந்த நோயாளிகளுக்கு சிகிச்சை :

2023-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 7ஆம் தேதி யன்று மக்களவையில் தாக்கல் செய்யப்பட்ட சிஏஜியின் தணிக்கை அறிக்கை, ஆயுஷ்மான் பாரத்-பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா திட்டத்தில் “இறந்துவிட்டார்கள்” எனக் குறிப்பிடப்படப்பட்டவர்களும் இத் திட்டத்தின் கீழ் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் என்கிறது சிஏஜி அறிக்கை. சத்தீஸ்கர், ஹரியானா, ஜார்க்கண்ட், கேரளம் மற்றும் மத்தியப் பிரதேசம் மாநிலங்களில் இந்த முறைகேடுகள் அதிகளவில் நடை பெற்றுள்ளன. போதுமான சரிபார்ப்பு இல்லாததால், பய னாளிகளின் தரவுத்தளங்களில் தவறான பெயர்கள், பிறந்த தேதி தவறாக பயன்படுத் தப்படுவது, குடும்ப உறுப்பினர்கள் எண்ணிக் கையிலும் பல்வேறு குளறுபடிகள் நிகழ்ந்துள்ளன.

ஆதாரோடு-செல்போன் எண்ணை சரிபார்க்கவில்லை :

பயனாளி கொடுத்துள்ள தகவல்கள் சரி தானா என்பதைக் கண்டறிய, அவர்கள் அளித் துள்ள செல்போன் எண் கவனத்தில் கொள் ளப்படவில்லை. தேவை ஏற்பட்டால் பயனாளி களைத் தொடர்பு கொள்ளவும், சிகிச்சை குறித்த கருத்துக்களை சேகரிக்கவும் மட்டுமே மொபைல் எண்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது. முழுக்க முழுக்க ஆதார் மட்டுமே அடிப் படையாகக் கொள்ளப்பட்டது. ஒவ்வொரு மாநிலமும் 100 சதவீதம் ஆயுஷ் மான் பாரத் அட்டை பெறுவதை உறுதி செய்யவேண்டும் என மாநில அரசுகளையும் மற்றும் யூனியன் பிரதேசங்களை மோடி அரசு வலியுறுத்துகிறது. ஆதார் தரவுகள் சரியாக இருந்தால் போது மானது. அவர்கள் திட்டத்தில் இணைக் கப்படுவர். பயனாளிகள் தங்களது செல் போன் எண்ணை கொண்டு செல்லவில்லை என்ற காரணத்திற்காகவோ அல்லது அவர்கள் கொடுத்த மொபைல் எண் மாறி விட்டது என்ற காரணத்திற்காகவோ பயனாளி களுக்கு சிகிச்சையை நிறுத்த முடியாது.

செல்போன் எண் கட்டாயமில்லையாம் :

முதலில் இந்தத் திட்டத்திற்கு செல்போன் எண் கட்டாயம் எனக் கூறவில்லை. எனவே கீழ் மட்டத்தில் பணியாற்றும் ஊழியர்கள் ஒரே எண்ணை பலருக்கு வழங்கியுள்ளனர் என்று முறைகேட்டை நியாயப்படுத்த முயல்கிறது. ஒன்றிய அமைச்சகம். ஆனால், தற்போது தேசிய சுகாதார ஆணையம் பயன்படுத்தும் தற்போதைய தரவுதளத்தில் சரியான மொபைல் எண்களை மட்டுமே பெறுவதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என விளக்கமளிக்கிறது ஒன்றிய அமைச்சகம். ஆதார் அட்டைக்கு கைரேகை, கருவிழி ஸ்கேன் மற்றும் முகம்- ஆகிய விவரங்கள் சேகரிக்கப்பட்டாலும் பயனாளிகளுக்கு வழங்கும் ஒடிபி (ஒரு முறை பயன்படுத்தும் கடவுச் செல்) கைரேகையின் அடிப்படை யில் வழங்கப்படுகிறது எனக் கூறி தப்பிக்கப் பார்க்கிறது ஒன்றிய அமைச்சகம்.

## மோடி அரசைக் கண்டித்து கடலூரில் கண்டன ஆர்ப்பாட்டம்

*10.08.2023 வியாழன் மாலை 4 மணிக்கு திராவிடர் விடுதலைக் கழகம் கடலூர் மாவட்டம் மங்களூர் ஒன்றியத்தில் ; மணிப்பூர் வன்முறையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமலும்; அது குறித்து எவ்வித பதிலும் அளிக்காமல் கள்ளமௌனம் காக்கும் ஒன்றிய பாஜக மோடி அரசைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.*

*ஒன்றிய பாஜக அரசையும், கள்ளமௌனம் காக்கும் பிரதமர் மோடியையும் கண்டித்து ; திராவிடர் விடுதலைக் கழக தலைமை செயற்குழு உறுப்பினர் ந. அய்யனார் அவர்கள் மற்றும் கழகத் தோழர்களின் கண்டன முழக்கங்களோடு கண்டன ஆர்ப்பாட்டம் துவங்கியது.*

*ஆர்ப்பாட்டத்திற்கு திராவிடர் விடுதலைக் கழகம், கடலூர் மாவட்ட மங்களூர் ஒன்றிய பொறுப்பாளர் போதிசத்வா தலைமை தாங்கினார். கடலூர் மாவட்ட அமைப்பாளர் சதிசு முன்னிலை வகித்தார்.*

*மாவட்ட துணைத்தலைவர் பிரகாஷ் வரவேற்புரை நிகழ்த்தினார். அவரைத் தொடர்ந்து கள்ளக்குறிச்சி மாவட்டத் தலைவர் க. மதியழகன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியை சார்ந்த பெரியசாமி, தொடர்ந்து விழுப்புரம் மாவட்டத் தலைவர் பூ. ஆ. இளையரசன், கழக பெரம்பலூர் மாவட்டச் செயலாளர் துரை. தாமோதரன்,தொடர்ந்து சிபிஐ-எம்எல் (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) கட்சி வழக்குரைஞர் S.ராஜசங்கர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மதியரசன் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினார்கள். நிறைவாக திராவிடர் விடுதலைக் கழக தலைமை செயற்குழு உறுப்பினர் ந. அய்யனார் சிறப்புரை நிகழ்த்தினார். க.வையாபுரி நன்றியுரை நிகழ்த்தினார்.*

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : Augest 18, 2023

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran